இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 04.09.2026

# ஒரு போட்டோ எடுக்க ரூ.5 கோடியா?

டெல்டா மாவட்டங்கள் வறண்டு கிடக்கின்றன. அதைப் பற்றி கொஞ்ச மாவது முதலமைச்சர் விஜய்க்கு கவலை இருக்கிறதா? இல்லை. உழவர்களுக்கு உதவி செய்ய ஏதாவது புதுத் திட்டம் உண்டா? சொல்லி இருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை.

மேட்டூர் அணை ஆண்டுதோறும் ஜூன் 12 ஆம் தேதியன்று திறக்கப்படும். இந்த ஆண்டு திறக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. திறப்பதற்கான முயற்சியாவது எடுத்தாரா? அதுவும் இல்லை. ஆண்டுதோறும் வழக்கமாகத் திறக்கும் நாளில் மேட்டூர் அணையைத் திறக்க முடியவில்லையே என்ற கவலை அல்லது வருத்தமாவது முதலமைச்சர் விஜய்க்கு இருக்கிறதா? இல்லை.

**ஜூன் 12 ஆம் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் அணையை செப்டம்பர் 1 ஆம் தேதி திறந்து வைக்க பட்டுவேட்டி சட்டையோடு போன முதலமைச்சர், விஜய்யாக மட்டுமே இருக்க முடியும். இவருக்குதான் என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்து செய்கிறாரா? இல்லை தெரியாமல் தான் செய்கிறாரா?**

82 நாட்கள் தாமதமாக மேட்டூர் அணை திறக்கப்படுகிறது. இதனால் ஒன்றரை லட்சம் ஏக்கரில் சாகுபடி குறையும் என்கிறார்கள். இதற்கு முதலமைச்சரின் பதில் என்ன? 'செல்லம் பாட்டிக்கு கூலிங்கிளாஸ் கொடுத்துவிட்டேன்' என்பது தான் அவர் இந்த மாநிலத்துக்குச் சொல்லும் பதிலா? ஒரே ஒரு பாட்டிக்கு கூலிங்கிளாஸ் கொடுத்து விட்டால் கோடிக்கணக்கான உழவர்களை கூல் செய்து விட முடியுமா?

மூதாட்டியைக் கட்டிப் பிடித்து போட்டோ எடுப்பதெல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்பே எம்.ஜி.ஆர். செய்துவிட்டுப் போய்விட்டார். இன்னும் அந்த அதரப்பழைய பாணி தனக்கு கைகொடுக்கும் என்று விஜய் நம்புகிறாரா?

**'அரசாங்கம் மாசா மாசம் கொடுக்கும் ஆயிரம் ரூபாய்ல தான் என் வாழ்க்கையே ஓடுது' என்று விஜய்யிடமே சொல்லி இருக்கிறார் அந்த மூதாட்டி. ஆயிரம் ரூபாய் நோட்டில் தெரிவது திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் முகம் அல்லவா? இவரைப் போன்றவர்களை ஏமாற்ற முடியாது.**

கர்நாடகா மாநிலம் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய தண்ணீரை உரிய அளவில் வழங்குவது இல்லை. அதைத் தட்டிக் கேட்க முதுகெலும்பு இல்லாத முதலமைச்சராக விஜய் இருக்கிறார். அதை மறைக்க 'மேட்டூர் சூட்டிங்' போல, 'மைசூர் சூட்டிங்' எடுக்க நினைத்தார் விஜய். ஆனால் கர்நாடக அமைப்பினர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பின் வாங்கினார் விஜய்.

காவிரி உரிமை நீரைத் தடுக்க மேகதாது அணையைக் கட்டிகிறது கர்நாடக மாநிலம். இதனைத் துணிச்சலோடு எதிர்க்கவில்லை முதலமைச்சர் விஜய். பாவலா காட்டிக் கொண்டு இருக்கிறார். இந்த உரிமைகளுக்காக ஒன்றிய அரசிடம் பேச வேண்டிய தமிழ்நாடு சிறப்பு பிரதிநிதி, ஏதோ ஒரு விழாவில் நடிகையுடன் கைகோர்த்து ஆடிக் கொண்டு இருக்கிறார். தனது படத் தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடுகட்ட வழங்கப்பட்ட பதவி அது.

**தனது அதிகாரத்துக்கு உட்பட்ட மாநிலத்தில் உழவர்களுக்கு நன்மை செய்தாரா முதலமைச்சர் விஜய் என்றால் அதுவும் இல்லை. அனைவருக்கும் பயிர்க்கடன் என்று சொல்லி விட்டு, அதிலும் பல்வேறு நிபந்தனைகளை வைத்து உழவர்களை ஏமாற்றினார் விஜய்.**

**இதன் தொடர்ச்சியாகத்தான் மேட்டூர் 'சூட்டிங்.' மேட்டூர் அணையை தண்ணீரைத் திறந்து வைக்க வருகை தரும் இவருக்கு ஆன செலவு மட்டும் ரூபாய் 5 கோடியைத் தொடுகிறதாம். இவரைப் பாதுகாக்கிறார்களாம்? யாரிடம் இருந்து? அவரது ரசிகர்களிடம் இருந்து. உலகத்தில் சொந்த ரசிகரை 'பேரிகார்டு' வைத்து தடுத்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு பயந்து போயிருக்கிறார் விஜய்.**

தேவையான அளவு தண்ணீரே இல்லை. பயிர் விளைச்சலுக்கு இது போதுமானதும் இல்லை. அரைகுறை நிலையில் மேட்டூர் அணையைத் திறந்து வைக்க கோடிகளை வாரி இறைக்க வேண்டுமா? அரசாங்கக் காசில் தனது விளம்பர வெறியைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமா?

**திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் மிகச் சரியாக ஜூன் மாதத்தில் மேட்டூர் அணை நீர் திறந்து வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு ஒரு மாதம் முன்னதாகவே திறந்து வைக்கப்பட்டது. இதெல்லாம் இன்றைய முதலமைச்சருக்குத் தெரியுமா?**

மேட்டூர் அணை திறந்து வைக்கப்பட்டால் 200 நாட்கள், 180 நாட்கள் என தண்ணீர் பாயும். அதுதான் உழவர்களை மகிழ்வித்தது. இன்று மூன்று மாத காலம் தாமதமாகத் திறப்பதால் மொத்தமே 45 நாட்கள் தான் தண்ணீர் பாயும். இது போதாது, காணாது என்கிறார்கள் உழவர்கள். இதுவாவது முதலமைச்சருக்கு சொல்லப்பட்டதா?

"டெல்டா பாசனத்துக்காக செப்.1-ம் தேதி முதல் 45 நாட்களுக்கு மேட்டூர் அணை திறக்கப்படும்" என அரசு அறிவித்துள்ளது விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் மேட்டூர் அணையில் தற்போதைய நீர்மட்டம் 90 அடியாகத் தான் உள்ளது. இதனால், அணையில் இருந்து 40 முதல் 50 நாட்கள் வரை மட்டுமே தண்ணீர் திறக்க முடியும். இது சம்பா சாகுபடிக்கு போதுமானதாக இருக்காது.

எனவே, அணைக்கு நீர்வரத்தும் 8 ஆயிரம் முதல் 12 ஆயிரம் கனஅடி வரை இருக்கும் நிலையில், அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டிய பிறகோ அல்லது செப்.10-ம் தேதிக்கு பிறகோ பாசனத்துக்காக தண்ணீர் திறந்தால்தான் ஒரு போக சம்பா சாகுபடியை விவசாயிகள் முழுமையாக செய்ய முடியும்" என்று விவசாய சங்கங்கள் சொல்வதை முதலமைச்சர் விஜய்க்கு யாராவது சொன்னார்களா?

**அல்லது, 'சூட்டிங் தானே போய் வரட்டும்', 'அவர் மேட்டூர் அணையைத் திறக்கப் போகவில்லை, செல்லம் பாட்டிக்கு கூலிங்கிளாஸ் கொடுக்கத் தானே போகிறார்' என்று அதிகாரிகள் விட்டுவிட்டார்களா?**

●●

## நேபாளத்தில் 6 நாளில் 100 மீட்புப் பணிகள்!

காத்மாண்டு, செப்.4-

நேபாளத்தின் முதல் பெண் ஹெலிகாப்டர் கேப்டனான பிரியா அதிகாரி, 6 நாட்களுக்குள் சுமார் 100 மீட்புப் பணிகளில் ஈடுபட்டு ஏராளமானோரை காப்பாற்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

இதுகுறித்து, நேபாளத்தின் முதல் பெண் ஹெலிகாப்டர் கேப்டனான பிரியா அதிகாரி கூறியதாவது: வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட ரசுவா பகுதியில் இன்னும் ஏராளமானோர் காணாமல் போயுள்ளனர். திடீர் வெள்ளத்துக்குப் பிறகு திமுரே பகுதியில் இருந்து முதல் இரண்டு நாட்களில் மட்டும் 200க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

ராணுவத்தின் 6 ஹெலிகாப்டர்கள் இந்த மீட்புப் பணியில் ஈடுபட்டன. 6 நாட்களுக்குள் சுமார் 100 மீட்புப் பணிகளில் ஈடுபட்டு ஏராளமானோரை காப்பாற்றினேன். ஒவ்வொரு முறையும் நான் சென்று தரையிறங்கும் போது, அங்கு மக்கள் இருப்பதையும், அவர்கள் என்னை நோக்கி கையசைப்பதையும் பார்க்கிறேன். அப்போது, "நீங்கள் உயிர் தப்பிவிட்டீர்கள்" என்று அவர்களிடம் கூறுகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**யார் இந்த பிரியா அதிகாரி?**

விமானப் போக்குவரத்துத் துறையில், நேபாளத்தின் முதல் பெண் ஹெலிகாப்டர் கேப்டன் என்ற பெருமையை பிரியா அதிகாரி பெற்றார். சுற்றுச்சூழல் அறிவியல் படித்துள்ளார். பின்னர் விமானப் பணிப்பெண்ணாக பணியாற்றினார். அதன் பிறகு, பிலிப்பைன்ஸ் சென்று ஹெலிகாப்டர் ஓட்டுவதற்கான பயிற்சியை பெற்றார். 2017ம் ஆண்டு முழுநேர ஹெலிகாப்டர் விமானியாக ஆனார்.

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இன்றைய முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு, இதே மாதிரி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் செய்யும்போது அவர்களின் கட்சி அலுவலகத்துக்கு அழைத்து வந்து, அவர்களை எல்லாம் சந்தித்து பேசியிருக்கிறார். எனவே, எங்களின் கோரிக்கை, நாங்கள் கேட்க விரும்புவது, இந்த அரசின் கவனத்துக்கு எடுத்துவர விரும்புவது, தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை, முதலமைச்சர் எப்போது நிறைவேற்றிக் கொடுப்பார். தூய்மைப் பணியாளர்களைச் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் பேசுவாரா என்பதை, இந்த அவையின் கவனத்துக்கு எடுத்து வந்து அமர்கிறேன்.

எங்கள் ஆட்சிக் காலத்தில் போராட்டம் நடந்தது. இங்கே பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பேசும்போது, '100 நாட்களைத் தாண்டி போராட்டம் நடந்தது' என்று சொன்னார்கள், அப்படியானால் நீங்களும் 100 நாட்கள் தாண்டும் வரை காத்திருக்கப் போகிறீர்களா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

**ஒரு அமைச்சர் கூட சந்தித்துப் பேசவில்லை!**

எங்கள் ஆட்சியில் போராட்டம் நடந்த போது, எங்களின் அப்போதைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள், மேயர் பிரியா அவர்களெல்லாம் தூய்மைப் பணியாளர்களைத் தொடர்ந்து சந்தித்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்போது ஆட்சியில் இருக்கும் போது ஒரு அமைச்சர்கூட அந்தப் போராட்டக் களத்துக்குச் சென்று அவர்கள் யாரையும் இதுவரை சந்திக்கவில்லை. ஆட்சியில் இல்லாதபோது தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்க தயாராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள், இப்போது தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்க மறுப்பது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

110 விதியின் கீழ் முதலமைச்சர், பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார். அதில் வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டுள்ளன என்று அறிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் இப்போது விவாதம் போய்க் கொண்டிருக்கிறது.

**தி.மு.கழக ஆட்சியில் 5 ஆயிரம் வழக்குகள் வாபஸ்!**

இங்கு ஒரு அமைச்சர் பேசும் போது, இதுதான் வரலாற்றிலேயே முதல்முறை என்று பேசியிருக்கிறார். அது சரியான தகவல் இல்லை. எங்களின் ஆட்சியின்போது, எங்கள் தலைவர், 'குடியுரிமை திருத்தச் சட்டம்', 'வேளாண் சட்டம்', '8 வழிச்சாலை போராட்டம்', அமைச்சர் அண்ணன் வன்னியரசு அவர்கள் சொன்னதுபோல, 'கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு', 'மீத்தேன் எதிர்ப்பு போராட்டம்' உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது போடப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளை, எங்கள் தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது வாபஸ் பெற்றுள்ளார்.

**110 - விதியின் கீழ் அறிவிக்கவில்லை!**

ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அப்போது எங்களின் தலைவர், முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ் அறிவிக்கவில்லை. அதிகாரிகளை அழைத்துச் சொல்லிவிட்டு, இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் செய்கிறோம் என்று இந்த அவையில் தெரிவித்தார். இன்னும் ஒரே ஒரு விஷயம். வேளாண்துறை அமைச்சர் குறிப்பிட்டு பேசும் போது, விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகள்.... என்ற வார்த்தையை சொல்லியிருக்கிறார். அதை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை ஆற்றினார்.

### நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதலமைச்சர் விஜய் ஆட்சியில்

# கடந்த 4 மாதங்களில் ரூ.32,925 கோடி கடன்!

## நிதிச்சுமை அதிகரிப்பு!

சென்னை, செப்.4-

தமிழக அரசின் 2026-27ம் நிதியாண்டின் முதல் 4 மாதங்களுக்கான நிதிநிலை விவரங்கள் வெளியாகியுள்ளன. ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில் அரசுக்கு ரூ.89,718 கோடி வருவாய் கிடைத்துள்ள நிலையில், மொத்த செலவு ரூ.1.23 லட்சம் கோடியாக உள்ளது. இதனால் வருவாயை விட செலவு ரூ.25,267 கோடி அதிகமாகியுள்ளது. ஜூலை மாதம் வரையிலான தமிழக அரசின் கணக்குகளை இந்திய கணக்கு தணிக்கைத் துறை (CAG) இணையதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன. நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூலை வரை தமிழக அரசு ரூ.32,925.09 கோடி கடன் மற்றும் பிற பொறுப்புகள் மூலம் நிதி திரட்டியுள்ளது.

ஜூன் மாத இறுதியில் ரூ.20,881 கோடியாக இருந்த கடன், ஜூலை மாதத்தில் மட்டும் ரூ.12,044 கோடி அதிகரித்துள்ளது. அதாவது, ஒரே மாதத்தில் ரூ.12 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கடன் பெறப்பட்டுள்ளது. 2026-27ம் ஆண்டுக்கான தமிழக அரசின் மொத்த வருவாய் வரவு இலக்கு ரூ.3,44,575.31- கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜூலை இறுதி வரை ரூ.89,718.47 கோடி மட்டுமே கிடைத்துள்ளது. இது பட்ஜெட் இலக்கில் 26.04 சதவீதம். ஜூலை வரை அரசின் வருவாய் செலவு ரூ.1,14,985.02 கோடியாக உள்ளது. இதனால் வருவாய் பற்றாக்குறை ரூ.25,266.55 கோடியாக உயர்ந்துள்ளது. அரசின் மொத்த செலவு ரூ.1,22,715.53 கோடியாக உள்ளது.

இதற்கு மாறாக, வருவாய் வரவு ரூ.89,718.47 கோடி மட்டுமே. பழைய கடன்களுக்கான வட்டியாக முதல் 4 மாதங்களில் ரூ.21,175.73 கோடி செலுத்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கு ரூ.17,237.16 கோடி செலவிடப்பட்டுள்ளது. இரண்டையும் சேர்த்தால் ரூ.38,412.89 கோடி. புதிய சாலைகள், கட்டிடங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு மற்றும் சொத்துகளை உருவாக்குவதற்கான மூலதனச் செலவுக்காக 2026-27ம் ஆண்டில் ரூ.59,602.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜூலை இறுதி வரை இதில் ரூ.7,730.51 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. கடந்த 2025-26ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில் தமிழக அரசின் வருவாய் ரூ.85,876 கோடியாகவும், மொத்த செலவு சுமார் ரூ.1.09 லட்சம் கோடியாகவும் இருந்தது. அப்போது பெறப்பட்ட கடன் ரூ.30,956 கோடி.

இந்த ஆண்டில் இதே 4 மாதங்களில் வருவாய் ரூ.89,718 கோடியாக உயர்ந்திருந்தாலும், கடன் ரூ.32,925 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது சுமார் ரூ.1,969 கோடி கூடுதல் கடன் பெறப்பட்டுள்ளது. முதல் 4 மாதங்களிலேயே ரூ.25 ஆயிரம் கோடிக்கும் அதிகமான வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மேலும், கடன் தொகை ரூ.32,925 கோடியை தாண்டியுள்ள நிலையில், அதற்கான வட்டி செலவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் வருவாயை அதிகரிப்பது, செலவுகளை கட்டுப்படுத்துவது, வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியை அதிகரிப்பது ஆகியவை தமிழக அரசுக்கு முக்கிய நிதி சவால்களாக உருவெடுத்துள்ளன.

### எந்தவிதத் திட்டமுமின்றி தாமதமாக மேட்டூர் அணை திறந்துள்ளதால்

# டெல்டா விவசாயிகள் பெருமளவில் விரக்தி!

## முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பாதிப்புகள் தொடர்பாக அறிக்கை!

**சென்னை, செப்.4-**

**எந்தவிதத் திட்டமுமின்றி தற்போது தாமதமாக மேட்டூர் அணை திறந்துள்ளதால் எந்தவிதப் பலனும் கிடைக்காமல் டெல்டா விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் விளக்கமாக அறிக்கை வெளியிட்டுள்ளார். மேட்டூர் அணை தாமதமாகத் திறப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை வருமாறு:-

கடந்த தி.மு.க. ஆட்சியின் சாதனைகளுள் ஒன்றாக, வழக்கமாகத் திறக்கப்படும் ஜூன் 12-ஆம் தேதிக்குப் பதிலாக, இந்த நிர்வாகத் திறனற்ற த.வெ.க. ஆட்சியில் அணைகள் தாமதமாகத் திறக்கப்பட்டதால், ஜூன் மாதத்தில் தொடங்கி செப்டம்பர் மாதத்திற்குள் அறுவடை செய்யப்படும் குறுவைப் பருவ நெல் சாகுபடி முற்றிலுமாகக் குறைந்துள்ளது.

எந்தவிதத் திட்டமும் இன்றி தற்போது தாமதமாகத் திறக்கப்பட்டுள்ள மேட்டூர் அணையினால் தங்களுக்கு என்ன பயன் என்று டெல்டா விவசாயிகள் விரக்தியோடு கேள்வி எழுப்புகின்றனர். விவசாயிகளும் விவசாயச் சங்கங்களும் முன்வைக்கும் நியாயமான கருத்துகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது இப்போது அவசியமாகிறது.

**நிலத்தடி நீர்மட்டம் குறைவு:**

கால்வாய்ப் பாசனத்திற்குத் தண்ணீர் வராததால், நிலத்தடி நீரை நம்பி ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கும் நீரின்றிப் பயிர்களைக் காப்பாற்ற முடியாத சூழல் ஏற்பட்டிருக்கிறது.



போதிய தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் பெரும் கடன் சுமைக்கு ஆளாக நேரிடுவதுடன், ஏற்கனவே கடன் தள்ளுபடியில் இந்த அரசின் குழப்பங்களால் விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்பில் இருக்கின்றனர். லட்சக்கணக்கான டன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்படும் அபாயம் உருவாகியிருக்கிறது.

**சம்பா சாகுபடியில் நிலவும் சிக்கல்களும் சவால்களும்**

பருவகால மழை மற்றும் அணையின் நீர்வரத்தைப் பொறுத்தே அடுத்த சாகுபடிப் பணிகளைத் தொடங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி குறித்த நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்த விவசாயச் சுழற்சிக்கும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு போக சம்பா மற்றும் தாளடி சாகுபடிப் பயிர்கள் முழுமையாக வளர்ந்து அறுவடைக்கு வர 120 முதல் 140 நாட்கள் வரை தண்ணீர் தேவைப்படும். ஆனால், தற்போதைய அணை நீர் இருப்பைக் கொண்டு (சுமார் 54 டி.எம்.சி.) அரசு முதற்கட்டமாக 45 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கத் திட்டமிட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களின் ஒட்டு மொத்த சம்பா, தாளடி சாகுபடிக்கு சுமார் 205 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும் நிலையில், அணையில் தற்போது பாதி அளவு மட்டுமே நீர் இருப்பது விவசாயிகளிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

**பருவகால மாறுதல் ஆபத்து:**

வழக்கமாக சம்பா பயிர்கள் அக்டோபர் மாத வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் ஓரளவிற்கு வளர்ந்து, மழையைத் தாங்கும் நிலையை எட்டியிருக்கும். ஆனால், தற்போது செப்டம்பர் மாதத்தில் சாகுபடி தாமதமாகத் தொடங்குவதால், அக்டோபர் - நவம்பர் மாதங்களில் பெய்யும் கனமழையினாலும் வெள்ளத்தினாலும் இளம் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகும் அபாயம் அதிகரித்துள்ளது.

**பொருளாதார மற்றும் உற்பத்தி இழப்புகள் நெல் உற்பத்தி குறைதல்:**

மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதன் காரணமாக, தமிழக டெல்டா மாவட்டங்களில் மட்டும் சுமார் 12 லட்சம் டன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்படலாம் என வேளாண் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

நீண்ட நாட்களாக ஆறுகள் மற்றும் பாசன வாய்க்கால்கள் காய்ந்து கிடப்பதால், அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் நிலத்தில் உறிஞ்சப்பட்டு, டெல்டாவின் கடைமடைப் பகுதிகளுக்குச் (நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களின் இறுதிப் பகுதிகள்) சென்றடையக் கூடுதல் நாட்களாகும். இதனால், அங்குள்ள விவசாயிகளுக்குப் பாசன நீர் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படும்.

வடகிழக்குப் பருவமழை மற்றும் கர்நாடகாவிலிருந்து வர வேண்டிய காவிரி உபரி நீர் ஆகியவற்றை மட்டுமே நம்பி இனி சம்பா சாகுபடியின் தலைவிதி உள்ளது. இவை இரண்டுமே இந்த ஆட்சியில் கானல் நீரான நிலையில், விவசாயம் மிகப்பெரிய கேள்விக்குறியாகியிருக்கிறது.

கடந்த தி.மு.கழக ஆட்சியில் குளங்கள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் முறையாகத் தூர்வாரப்பட்டு, நிலத்தடி நீரை உயர்த்தத் தொலைநோக்குத் திட்டத்தோடு செயல்படுத்தப்பட்டதால், நீர்நிலைகள் அதிகமான தண்ணீரைச் சேமிக்கத் தயாராக இருக்கும் நிலையில், தற்போது திறக்கப்படும் தண்ணீர் அந்த நீர் சேமிப்பு ஆதாரங்களை நிறைக்குமா என்பதும் சந்தேகமே.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.